2007 ஜனவரி 25]

சார்பாகவும் முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் பெரிய தாழை மீனவ மக்களின் நீண்ட நாளைய கோரிக்கை, அவர்கள் மீன் பிடிக்கும் தொழிலை மட்டுமே நம்பி இருக்கிறார்கள். ஆகையால், இந்த மக்களின் நலன் கருதி தாங்கள் இதை மறுபரிசீலனை செய்ய முடியுமா என்பதைத் தங்களின்வாயிலாக கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய தாழையில் ஏற்கெனவே அரசுக் கட்டுப்பாட்டில் இருந்து வந்த பனிக்கட்டி உற்பத்தி நிலையம் இலாபகரமாக இயங்காத நிலையில் அரசாணை நிலை எண் 338, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை, நாள் 2–8–1989-ல் ஆணையிட்டபடி மூடப்பட்டது. அதன்பிறகு தனியார் முதலீட்டில் பனிக்கட்டி உற்பத்தி நிலையங்கள் இப்பகுதியில் செயல்பட ஆரம்பித்தன. தற்சமயம் குளிர்பதனக்கூடம் அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லாமல் இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை ஏற்று, அந்தப் பகுதியிலே மீன்வரத்து அதிகமாக இருக்குமேயானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 40, திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

40—

பால் குளிரூட்டும் நிலையம்

***4847—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதியில் புதியதாக பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 ஜனவரி 25

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதியில் புதியதாக பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கான திட்டம் அரசிடம் ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வால்பாறையில் புதிதாக பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்பதை தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய பகுதியில் குறைந்தபட்சம் 5,000 லிட்டர் கொள்முதல் இருக்குமேயானால் மொத்த பால் குளிரூட்டும் அமைப்பான் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கிறது. அந்தப் பகுதியில் எவ்வளவு பால் கொள்முதல் ஆகிறது என்பதை விசாரணை செய்து, 5,000 லிட்டர் வரை இருக்குமேயானால் நிச்சயமாக அங்கு பால் குளிரூட்டும் அமைப்பான் ஒன்று அமைக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. காமராஜ்.

திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் தரங்கம்பட்டி பகுதியைச் சுற்றிலும் இருந்துதான் பால் உற்பத்தி அதிகமாகப் பெறப்பட்டு கரூர் மற்றும் திருச்சிக்கு அனுப்பப்படுகிறது. கிட்டத்தட்ட 25,000 லிட்டருக்குமேல் அந்தப் பகுதியிலிருந்து பால் பெறபபட்டு மேற்கண்ட கரூர் மற்றும் திருச்சி பகுதிக்கு அனுப்பப்படுகிறது. எனவே, தரங்கம்பட்டியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் கொள்கைப்படி தற்போது பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைப்பதற்குப் பதிலாக மொத்த பால் குளிரூட்டும்

2007 ஜனவரி 25]

அமைப்பான் அமைக்கக்கூடிய பணி நடைபெற இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுபோல் முன்பும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கை பரிசீலனையில் உள்ளது. பரிசீலனை முடிந்த பிறகு நிச்சயமாக அந்தப் பகுதியில் மொத்த பால் குளிரூட்டும் அமைப்பான் அமைக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்டுவதைத் தடுப்பது மற்றும் முல்லைப் பெரியாறு பிரச்சினையில் தமிழக அரசின் நிலை

திரு. சி. ஞானசேகரன்: Speaker Sir.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், ரிப்போர்ட்டை கொடுங்கள் சார்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏனென்றால் அதை முடித்தால் இதற்கு வரமுடியாது. அதற்காகத்தான் கேட்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே எங்களுடைய மாவட்டத்தினுடைய ஜீவாதாரப் பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிற முக்கியமான பாலாற்றுப் பிரச்சினை குறித்து அவைக்கு கொண்டு வந்தேன். அப்போது மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே நாங்கள் நிச்சயமாக ஆந்திர அரசு பாலாற்றின் குறுக்கே அணை கட்டுவதைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சியை எடுப்போம் என்ற உறுதியை நேற்று அளித்தார்கள். அரசின் சார்பில் என்ன முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது?

நேற்றுகூட பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று வந்தார்கள். அங்கே வனம் மற்றும் சுற்றுச்சூழல்